மாநிலக் கல்லூரி வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் பிறந்ததாளில் நடைபெற்ற தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள் விழாவில் நேற்று (19.02.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், மாநிலக் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் இரா. இராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், முனைவர் கு.ஞானசம்பந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

டாக்டர் உ.வே.சாமிநாதையர் பிறந்த நாள்! தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாட்டம்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்று சிறப்புரை!

சென்னை, பிப்.20-

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்' விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.12.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் பிறந்தநாள், 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக்' கொண்டாடப்படும் என்று அறிவித்த தன் அடிப்படையில், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 171 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெறும் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்' விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (19.02.2025) தொடங்கி வைத்தார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்' விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

தமிழ்த்தாத்தா என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட நினைவில் வாழும் உ.வே.சாமிநாதையர் அவர்களுடைய 171ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்" விழா என்கின்ற வகையில், இன்றைக்கு சிறப்போடும், மகிழ்ச்சியோடும், எழுச்சியோடும் முதலாம் ஆண்டு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இன்றைக்கு தமிழ்த்தாத்தா அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு, 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்' என்கின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விழாவாக கொண்டாட வேண்டும் என்று அறிவித்தார்கள்.

ஏதோ விழா என்பதற்காக ஒரு அரசிற்கு மதிப்பு ஏற்படும் என்பதற்காக அல்ல, தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் அய்யா அவர்கள் தமிழுக்காக ஆற்றியிருக்கக்கூடிய பணிகளுக்காக இன்றைக்கும் நாம் தமிழ்த்தாத்தா அவர்களுக்கு இந்த விழாவை நாம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையில், இந்தத் துறையின் அமைச்சர் என்கின்ற முறையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் உரித்தாக்கிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களுக்கு மகுடம் சூட்டும் வகையில் தான், அன்னாரது பிறந்தநாளை நாம் தமிழ் இலக்கிய மறுவளர்ச்சி நாளாக மலரச் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் மீண்டும் மீண்டும் நான் நன்றியை உரித்தாக்கிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழையும், உ.வே.சாமிநாதையர் அவர்களையும் பிரித்துப் பார்க்க இயலாது என்று சொல்வார்கள். அதேபோல, தமிழனின் தொன்மைக்கு சான்றளிக்கும் வகையில், தங்கப்பட்டயமாக சங்க இலக்கியங்களை நமக்கு தந்தவர். இங்கே பேசிய அனைவரும் உ.வே.சாமிநாதையர் அவர்களை பற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பிறந்த நாளை முன்னிட்டு, நம்முடைய வேண்டுகோளை ஏற்று, துறையின் அழைப்பை ஏற்று, நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் இங்கே வந்து படத்திற்கு, திருவுருவச் சிலைக்கு மரியாதை செய்து விட்டு, அவசர அவசரமாக சென்னையில் தலைமைச் செயலகத்தில், இன்று ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்குவதற்கான நிதிநிலை தாக்கல் செய்வதற்கான ஆலோசனை கூட்டம் நடைபெறவிருக்கிறது.

அந்த வகையில் நானும் சொல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவருக்கும் இந்த நேரத்தில், நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை தாக்கல் செய்வதற்கான ஆலோசனை கூட்ட நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டியும் இருக்கின்ற காரணத்தால், நிச்சயமாக இந்த நிகழ்ச்சி தொடர்பான அனைத்து கருத்தரங்கங்கள் மற்றும் நிகழ்வுகளையும் ஒளி நாடா மூலமாக நான் கண்டறிய இருக்கிறேன். முதல் ஆண்டு நிகழ்ச்சி இன்றைக்கு சிறப்பாக துவங்கி இருக்கிறது.

அதே நேரத்தில், மாணவச் செல்வங்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டிருக்கிறீர்கள். நானும் உங்களைப் போன்று கல்லூரி மாணவனாக இருந்த போது, அன்றைக்கு சட்டமன்றத்தில் 1986ஆம் ஆண்டு மாற்று ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒன்றிய அரசால், இந்தி திணிப்பு என்ற சூழ்நிலை வந்த காரணத்தால், அந்த சட்ட நகலை எரித்ததில் நானும் ஒருவன் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அதன் காரணமாக, 45 நாட்களாக கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன்.

எனவே, இந்தத் தமிழை யாராலும் தொட்டுப் பார்க்க முடியாது என்பதற்கு இன்றைக்கு நம்முடைய பல்வேறு சான்றோர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இன்றைக்குக்கூட மும்மொழித் திணிப்பு மூலம் தமிழ் மொழிக்கு இருக்கக்கூடிய மகத்துவத்தை சிதைத்துப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைத் தான் நம்முடைய முதல மைச்சர் அவர்கள் கண்டனத்தின் மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை மீண்டும் தமிழ்நாட்டில் வந்து விடுமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதையெல்லாம் தடுப்பதற்காக தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் தொண்டனாக இன்றைக்கு நின்று கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக எந்த பாதிப்பு வந்தாலும், அதையெல்லாம் தகர்த்தெறியக்கூடிய பட்டாளங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை ஆங்காங்கே இரண்டு, மூன்று நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்வுகள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்,

இன்று நடைபெறவுள்ள பட்டிமன்றம் மற்றும் கருத்தரங்க நிகழ்ச்சிகள் இன்று மாலை வரை தொடர்ந்து நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் உங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில், எவ்வளவோ நேரங்கள் எதற்காகவோ நாம் வீண்செய்கிறோம். ஆனால், இந்த நேரத்தில் நம்முடைய தாய்மொழி தமிழுக்காக வித்திட்ட நம்முடைய தமிழ்த் தாத்தா போன்றவர்களுக்கு நாம் மரியாதை செய்வது என்று சொன்னால், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி முழுதும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.

அதனை தொடர்ந்து முனைவர் கு.ஞானசம்பந்தன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'உ.வே.சாமிநாதையரும் சுவடி தேடலும்' என்ற தலைப்பில் முனைவர் ப.சரவணன் அவர்களும் 'உ.வே.சாமிநாதையரின் பதிப்புச் செம்மை' என்ற தலைப்பில் முனைவர் க.பலராமன் அவர்களும் 'உ.வே.சாமிநாதையரின் சிந்தாமணிப் பதிப்பு' என்ற தலைப்பில் முனைவர் மு.முத்துவேல் அவர்களும் 'உ.வே.சாமிநாதையரும் காந்தியும்' என்ற தலைப்பில் திருமதி சித்ரா பாலசுப்பிரமணியன் அவர்களும் 'உ.வே.சாமிநாதையரின் நன்றி மறவாப் பண்பு' என்ற தலைப்பில் முனைவர் சீதாபதி ரகு அவர்களும் 'உ.வே.சாமிநாதையரின் உரைநடைப் பங்களிப்பு' என்ற தலைப்பில் முனைவர் இரா. வெங்கடேசன் அவர்களும் கருத்துரை வழங்கினர்.

கருத்தரங்க நிகழ்வைத் தொடர்ந்து "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிப் பங்களிப்பில் பெரிதும் விஞ்சி நிற்பது உ.வே.சாமிநாதையரின் பழந்தமிழ்ப் பற்றே! நவீனப் பதிப்பு நெறிகளே!" என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு தாமல் கோ. சரவணன் அவர்கள் நடுவராகவும் பழந்தமிழ்ப் பற்றே! என்ற தலைப்பில் செல்வன் நா. பூபாலக்கண்ணன், செல்வி அ. இராஜேஸ்வரி, செல்வன் மா. சரண்ராஜ் ஆகியோரும் நவீனப் பதிப்பு நெறிகளே! என்ற தலைப்பில் செல்வி ர.தமிழ், செல்வி நொ.சுபலட்சுமி, செல்வன் அ.முகிலன் ஆகியோரும் பங்கேற்று வாதித்தனர்.

முன்னதாக தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 171 வது பிறந்த நாளையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் நேற்று (19.2.2025) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மலர் தூவி மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

மக்களால் அன்போடு அழைக்கப்படக்கூடிய நினைவில் வாழும் அய்யா உ.வே.சாமிநாதையர் அவர்களுடைய 171வது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஆண்டுதோறும் நடத்தக்கூடிய வகையில் அரசின் சார்பில் இவருடைய பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக எடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இங்கு இருக்கின்ற தமிழ் சான்றோர்களும், கல்லூரியில் இருக்கக்கூடிய நம்முடைய பேராசிரியர் பெருமக்கள், மாணவ செல்வங்கள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களுடைய மரியாதையை செலுத்தி இருக்கிறார்கள்.

ஓலைச் சுவடிகளை யெல்லாம் கண்டறிந்து அச்சேற்றம் செய்து இந்த உலகிற்கு தமிழ் இலக்கியங்களைப் பற்றியும், தமிழைப் பற்றியும் ஒரு உணர்வுகள் ஏற்படுத்தும் வகையில் முத்திரைப் படைத்தவர். எனவே, அய்யா அவர்களது பிறந்தநாளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்" என்று தலைப்பு வைத்து இந்த ஆண்டு முதல் அவ்விழா கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் தமிழக அரசின் வரலாற்றில் இந்த ஆண்டு முதல் "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்" விழா துவங்கியிருக்கின்றது.

அதற்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு தான் காரணம். அந்த வகையில் இன்றைய தினம் மாநிலக் கல்லூரியில் கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் இன்று மாலைவரை நடைபெற இருக்கின்றது. இதில் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்தை எடுத்துசொல்ல இருக்கின்றார்கள். மாணவ செல்வங்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இனி ஆண்டுதோறும் நம்முடைய உ.வே.சா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள் விழா அரசின் சார்பில் கொண்டாடப்படும்.

ஆளுநர் பொறுப்புக்கு அழகல்ல!

கேள்வி : பாரதியாரின் பெயரில் பல்கலைக் கழகங்கள் இருந்தும் அவருக்கான இருக்கைகள் இல்லையென்று சொல்லி ஆளுநர் ஒரு குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறார்? அது பற்றி

அமைச்சர் பதில் : மேதகு ஆளுநர் அவர்கள் ஒரு அரசுக்கு ஆலோசனை சொல்வதாக இருந்தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சுட்டிக்காட்டுவதாக இருந்தாலும் குறிப்பின் மூலமாக அதிகாரிகள் மூலமாக தங்களுடைய கருத்துகளை சொன்னால் நலமாக இருக்கும். இது வேண்டுமென்றே ஒரு குற்றச்சாட்டை சொல்வது போல் தான் அமைகின்றதே தவிர, இது ஆளுநர் அவர்களின் பொறுப்புக்கு அழகல்ல என அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்தி நாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), கல்லூரி கல்வி இயக்கம் மற்றும் முதல்வர் இரா.ராமன், முனைவர் கு.ஞானசம்பந்தன், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரும், கழக மாணவர் அணி செயலாளருமான சி.வி.எம்.பி. எழிலரசன் காஞ்சிபுரம் எஸ்.எஸ்.கே.வி.பெண்கள் மேல்நிலைப்பள்ளி பொதுதேர்வு எழுதும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தி.இராம்பிரசாத், 1வது பகுதி துணை செயலாளர் ஆர்.வினோத்குமார் மற்றும் கழக உறுப்பினர்கள், பள்ளி தலைமை ஆசியரியர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில், இருந்து ரூபாய் 1 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்ட பணிகளை, அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில், க.தனசேகரன் எம்.சி, மு.இராசா எம்.சி, கே.கண்ணன் எம்.சி, எம். கிருஷ்ணமூர்த்தி, ரத்னா லோகேஷ்வரன், பொன் வர.லோகு, வாசுகி பாண்டியன், எஸ்.டி.தங்கராஜ், மு.கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா, ஜம்பு முருகன், செந்தில்குமார், அ.கதிரேசன், மைக்கேல், பழக்கடை பாஸ்கர், பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், வழக்கறிஞர் சதீஷ் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

விருகம்பாக்கம் தொகுதியில் ரூ. 1 கோடியே 62 இலட்சத்தில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.20

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில், இருந்து ரூபாய் 1 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற பணிகளை, அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மண்டலம் 10, வார்டு 128 இளங்கோ தெருவில், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடம் & பல்நோக்கு கட்டிடம், மண்டலம் 10, வார்டு 138, அன்னை சத்யா நகரில், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடிக் கட்டிடம்,

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மண்டலம் 10, வார்டு 128 காமராஜர் சாலையில் 22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை, வார்டு 138 எம்.ஜி.ஆர் நகர் ஜாகிர் உசேன் தெரு பகுதியில் 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் வளர்ச்சி மையம், என மொத்தம் ரூ.1,62,00,000 (ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சம்) மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், தலைமை செயற்குழு உறுப்பினர் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் க.தனசேகரன் எம்.சி, பகுதிச் செயலாளர்கள் மு.இராசா எம்.சி, கே.கண்ணன் எம்.சி, மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஷ்வரன், பொன் வர.லோகு, மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.டி.தங்கராஜ், வட்டச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா, ஜம்பு முருகன், செந்தில்குமார், அ.கதிரேசன், மைக்கேல், பழக்கடை பாஸ்கர், பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், வழக்கறிஞர் சதீஷ் கண்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், நிஷா சையத், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரை!

பம்மல் வடக்கு பகுதிச் செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா - வசந்தகுமாரி - கோ.காமராஜ் - வே.கருணாநிதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 20 -

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (20.2.2025, வியாழக்கிழமை) மாலை 5.30 மணியளவில் பம்மல் எஸ். எஸ்.மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமை வகிக்கிறார். எஸ். கே.நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்யானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க செயலாளர் திரு நீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், வே.கருணாநிதி, அ.தமிழ்மாறன், இரா. நரேஷ்கண்ணா, கோல்டு டி. பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, வி.ரவிச்சந்திரன், சத்திய பிரபு, ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜய குமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர பகுதி வட்டக்கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ச.பிரபு, ஞா.பிரபு, ஏ.செந்தில்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

அமீரக திமுக அமைப்பாளர் துபாய் மீரானுக்கு இந்திய அரசின் துணை தூதரக விருது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, பிப்.20-

கடந்த வாரம் துபாயில் இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற விழாவில் , சென்ற ஆண்டில் (2024) அமீரக அரசின் பொது மன்னிப்பு காலத்தில் விசா காலம் முடிந்து பல்வேறு தனிப்பட்ட பிரச்சினைகளால் பல ஆண்டுகளாக இந்தியாவிற்கு திரும்ப முடியாமல் அமீரகத்தில் சிக்கி தவித்த நூற்றுக்கணக்கான இந்தியர்கள் தாய்நாடு திரும்ப சிறப்பாக தொண்டாற்றியமைக்கு இந்திய அரசின் துணை தூதரகம் சார்பில், இந்திய துணைத் தூதர் மேதகு திரு சதிஸ் குமார் சிவன் அவர்கள் அமீரக திமுக அமைப்பாளர் மற்றும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் துபாய் மீரான் அவர்களுக்கு விருது வழங்கி பாராட்டினார்

இதனை தொடர்ந்து, துபாய் மீரான் அவர்கள் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து அமீரக திமுகவின் நான்கு ஆண்டு கால சமூகச் சேவைகளின் தொகுப்பின் புத்தகத்தினை வழங்கியும், தனக்கு கிடைத்த துபாய் இந்திய துணைத் தூதரகத்தின் விருதினை முதல்வரின் கரங்களில் கொடுத்து வாழ்த்துப் பெற்றார். முதல்வர் அவர்கள் எஸ் எஸ் மீரானை வெகுவாக பாராட்டி இதுபொன்ற சமூகச் சேவைகளை தொடர்ந்து செய்யுமாறு வலியுறுத்தினார்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து இந்திய துணைத் தூதரகத்தின் சமூக சேவைக்கான விருதினை அமீரக திமுக அமைப்பாளர் எஸ் எஸ் மீரான் பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

சென்னை, பிப்.20-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி, 15 ஆவது வட்டம் மணலிபுது நகரில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், வட்ட துணைச் செயலாளர் பக்தவச்சலம், பாக ஒருங்கிணைப்பாளர் பாலன், ஏசுராஜ், மணலி புதுநகர் சி. எம். ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், கடப்பாக்கம் என். மகேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுத்தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ரப்பர்,தேர்வு எழுதும் அட்டை ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கி வாழ்த்தினார்.

தேர்வு நேரத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் கொடுத்து உதவிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை அமைச்சருக்கும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும், பள்ளியின் தலைமை ஆசிரியர், துணை தலைமை ஆசிரியர் ,பள்ளி வளர்ச்சி குழு தலைவர் மகாலட்சுமி, பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோர் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகாலட்சுமி, பாரதி,ரூப் குமார், தீயம் பாக்கம் ஜோசப் எலந்தனூர் சிவப்பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 15 வது வட்டம் மணலி புதுநகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய போது எடுத்த படம். வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில், எஸ். கோபாலகிருஷ்ணன், பக்தவச்சலம், பாலன், ஜேசுராஜ், சி. எம்.ராஜா, என். மகேஷ் குமார், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், மகாலட்சுமி, ரூப் குமார்,பாரதி மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர், துணை தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.